பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
17 09 2026 THURSDAY 6 45 AM
வணக்கம் - மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பிறந்த தினமான இன்று பிஜேபி சார்பில் சேவை தினமாக கொண்டாடப்படுகிறது.
- மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு மீதான பரிசீலனை இன்று நடைபெறுகிறது.
- தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு குறித்து பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.
- மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வர் திருக்கோயிலில் 17 ஆண்டுகளுக்கு பிறகு இன்று குடமுழுக்கு நடைபெறுகிறது.
- செஸ் ஒலிம்பியாட் போட்டியில், இந்தியா முதல் சுற்றில் வெற்றி பெற்றது.

--இனி விரிவான செய்திகள்--

-------

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பிறந்த தினமான இன்று பிஜேபி சார்பில் சேவை தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, நாடு முழுவதும், ரத்த தானம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பிரதமரின் 25 ஆண்டுகால பொதுச்சேவைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், இன்று மாலை சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில், அரசு திட்டங்களின் பயனாளிகள் உள்ளிட்ட குடும்பத்தினர் பங்கேற்று விளக்கேற்ற உள்ளனர்.

இதற்கிடையே, இன்று முதல் ஒரு மாத காலத்திற்கு சேவை உறுதிமொழி இயக்கத்தை பிஜேபி நடத்த உள்ளது.

பொதுச் சேவையில் அவரது அர்ப்பணிப்பு குறித்து, எடுத்துரைப்பதையும், இளைஞர்களை சேவைப் பணிகளில் ஈடுபட செய்வதையும் இது நோக்கமாக கொண்டுள்ளது.

அத்துடன், 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் தேதி அன்று குஜராத் முதலமைச்சராக திரு.நரேந்திர மோடி பதவி ஏற்று 25 ஆண்டுகள் ஆனதையும் இந்த இயக்கம் குறிக்கிறது.

-----------

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு மீதான பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

மனுக்களை விலக்கிகொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

2 தொகுதிகளிலும் அடுத்த மாதம் 6-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

-----------

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வர் திருக்கோயிலில் 17 ஆண்டுகளுக்கு பிறகு இன்று குடமுழுக்கு நடைபெறுகிறது.

இதையொட்டி, மதுரை மாநகரம் விழாக்கோலம் பூண்டுள்ளதாகவும், பல்லாயிரகணக்கான பக்தர்கள் கோயிலை சுற்றி திரண்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

-----------

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் திரு குட நன்னீராட்டு பெருவிழா 17 ஆண்டுகளுக்கு பிறகு நடைபெறுவது மகிழ்ச்சி அளிப்பதாக முதலமைச்சர் திரு. விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தமிழர் பண்பாட்டின் உன்னத அடையாளத்தை உலகிற்கு உணர்த்தும் வகையிலும், நம் மண்ணின் ஆன்மீகம் மற்றும் வரலாற்று பாரம்பரியத்தின் பெருமையை எடுத்துரைக்கும் வகையிலும், நடைபெறும் இந்நன்னாளில், இறைவனின் திருவருள் அனைவரின் வாழ்விலும் நிறைந்து, நலமும், வளமும், மகிழ்ச்சியும் பெருகட்டும் என்று கூறியுள்ளார்.

-----------

தமிழகத்தில் அதிகரித்துள்ள மின் தேவைகளை எதிர்கொள்ள போதிய திட்டமிடல் இல்லாததால் மின்வெட்டு ஏற்படுவதாக பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

சேலம் விமானநிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தடையற்ற மின் விநியோகத்தை, உறுதி செய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை இடைத்தேர்தலில், பாமக யாருக்கு ஆதரவு அளிக்கும் என்பது குறித்து, விரைவில் அறிவிக்கப்படும் என்று அவர் கூறினார்.

விழா காலங்களில் ஆம்னி பேருந்துகளின் கட்டணத்தை முறைப்படுத்த அரசு தவறிவிட்டதாகவும், தீபாவளி பண்டிகையின் போது, இதுகுறித்து அரசு எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

-----------

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு குறித்து பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நடப்பாண்டில், டெங்கு காய்ச்சல் பரவல், வழக்கத்திற்கு மாறானதாகவோ அல்லது அபாயகரமானதாகவோ இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் பருவமழை காலங்களில், தட்பவெட்ப மாற்றங்களின் காரணமாக டெங்கு பாதிப்புகளில், பருவகால மாறுபாடுகள் ஏற்படுவது இயல்பானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காய்ச்சல் பாதிப்புகளை கண்காணித்து, தேவையான மருத்துவ சிகிச்சையை விரைவாக அளிக்க, அதற்கென சிறப்பு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டால், தாமதிக்காமல் அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது அரசு மருத்துவமனையை அணுகி உரிய சிகிச்சை பெறுமாறு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

-----------

நீலகிரி, கோயம்புத்தூர், கரூர், திருச்சி, பெரம்பலூர், அரியலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, கிருஷ்ணகிரி, காவிரிப்பட்டினம், ஒசூர், சூளகிரி உள்ளிட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நேற்று இரவு கனமழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

-----------

இந்தியாவின் அணுசக்தி விரிவாக்கம் குறித்து, அமெரிக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. கிரிஸ் ரைட்டுடன், மத்திய மின்துறை அமைச்சர் திரு.மனோகர் லால் ஹூஸ்டன் நகரில் விவாதித்தார்.

---------

நேபாளத்தில், முக்திநாத் கோயில் அருகே நேரிட்ட சாலை விபத்தில், 12 இந்தியர்கள் காயமடைந்தனர்.

---------

திரிபுராவில் கடந்த இரண்டு நாட்களாக காவல்துறையினர் மேற்கொண்ட சோதனையில், 98 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

---------

மும்பை-நாசிக் நெடுஞ்சாலையில் நேரிட்ட சாலை விபத்தில், மும்பையை சேர்ந்த 4 பேர் உயிரிழந்தனர்.

-----------

விவசாயிகளின் பயிர்க்கடன் தள்ளுபடி குறித்து, அமைச்சர்கள் திரு.ரமேஷ், திரு. வினோத் ஆகியோர் தலைமையில், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

---------

திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலையில், 5 சுயஉதவி குழுவினருக்கு 5 லட்சம் ரூபாய கடன் உதவியை அமைச்சர் திரு.ரஞ்சித்குமார் வழங்கினார்.

---------

முகூர்த்த தினமான இன்று அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும், கூடுதல் முன்பதிவு வில்லைகள் வழங்கப்படும் என்று மாநில பதிவுத்துறை தெரிவித்துள்ளது.

---------

நாகை மாவட்டம் தெற்கு பொய்கை நல்லூரில் புதுப்பிக்கப்பட்ட 200 ஆண்டுகால தேவாலயத்தை தஞ்சை திருமண்டல பேராயர் சாம்வேல் ராஜதுரை திறந்துவைத்தார்.

-----------

திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில், விநாயகர் சிலைகள் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு கரைக்கப்பட்டன.

---------

சென்னையில் பட்டினப்பாக்கம், நீலாங்கரை கடற்கரைகளில், அடுத்த ஆண்டு முதல் விநாயகர் சிலைகள் கரைக்கப்பட மாட்டாது என்று தமிழக அரசு தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் உத்தரவாதம் அளித்துள்ளது.

---------

தாம்பரத்திலிருந்து சென்னை கடற்கரைக்கு இன்று காலை 11 மணி மற்றும் பிற்பகல் 1.50 மணிக்கு இயக்கப்படும் ரயில்கள் ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

-----------

செஸ் ஒலிம்பியாட் போட்டியில், இந்தியா ஓபன் பிரிவு மற்றும் மகளிர் பிரிவில் முதல் சுற்றில் வெற்றி பெற்றது.

உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியில், ஓபன் பிரிவில், இந்திய அணி 3-1 என்ற ஆட்டக்கணக்கில் தாய்லாந்தை வென்றது.

குகேஷ், சரின், விதித் குஜராத்தி ஆகியோர் தத்தமது ஆட்டத்தில் வெற்றி பெற்றனர்.

மகளிர் பிரிவில் இந்திய அணி, 4-0 என்ற ஆட்டக்கணக்கில் டொமினிக்கன் குடியரசை வென்றது.

கொனேரு ஹம்பி, வைஷாலி ரமேஷ்பாபு, வந்திகா அகர்வால், சபிதா ஸ்ரீ ஆகியோர் தங்களது ஆட்டங்களில் வெற்றி பெற்றனர்.

-----------

இந்தியா-ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி டுவெண்டி டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

புதுதில்லியில் நடைபெற உள்ள இப்போட்டி, இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

3 ஆட்டங்களை கொண்ட இத்தொடரில், இந்தியா முதல் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றி உள்ளது.

<<<<END>>>>